**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 158 நாள்: 20.05.2026

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை, மழைநீர் வடிகால், கட்டடங்கள், பூங்கா, விளையாட்டுத் திடல்கள், மருத்துவமனைகள், திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (20.05.2026) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், திடக்கழிவு மேலாண்மை துறையின் கீழ் குப்பைகள் சேகரித்தல், பயோ மைனிங் மேற்கொள்ளும் பணிகளை தனிக்கவனம் செலுத்தி நகரை தூய்மையாக பராமரித்திட அறிவுறுத்தினார். பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வெள்ளத்தடுப்பு பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் நீர்நிலைகளை தூர்வாருதல், மழைநீர் வடிகால் உள்ளிட்ட பணிகளை விரைந்து முடித்திட அறிவுறுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அம்மா உணவகங்களை மேம்படுத்தி, பொதுமக்களுக்கு தரமான, சுவையான உணவினை வழங்கிட அலுவலர்களுக்கு ஆணையாளர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருநாய்களைக் கட்டுப்படுத்துதல், பொதுமக்களுக்கு இடையூறாக சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளைக் கட்டுப்படுத்துதல், அபராதம் விதித்தல் உள்ளிட்ட பணிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். மேலும், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள், புகார்கள் மீது தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெறும் வளர்ச்சித் திட்டப் பணிகளின் நிலவரம் குறித்து அலுவலர்கள் நாள்தோறும்

களஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என ஆணையாளர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், இணை ஆணையாளர்கள் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., துணை ஆணையாளர்கள் திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (பணிகள்), திரு. ம. பிரதிவிராஜ், இ.ஆ.ப., (வருவாய் (ம) நிதி), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு வட்டாரம்), திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., (தெற்கு வட்டாரம்) மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**